# யூன்– 19– செவ்வாய்

புனித ரோமுலான்ட்

ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்: என் பாவம் எப்போதும் என் மனக் கண்முன் நிற்கின்றது. திபா. 51:3

## முதல் வாசகம் : 1 அரசர் 21 : 17 – 29

அந்நாட்களில் நரரபேத்து இறந்தபின் திஸ்பேயரான எலியாவுக்கு ஆண்டவர் உரைத்தவாக்கு. ”நீ புறப்பட்டு, சமாரியாவிலிருந்து ஆட்சிசெய்யும் இஸ்ரயேலின் அரசன் ஆகாபைப் போய்ப்பார். அவன் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தைத் தன் உடைமை யாக்கிக் கொள்ள அங்கு போயிருக்கிறான்.நீ அவனிடம் சொல்ல வேண்டியது:“ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்,நீ கொலை செய்து, கொள்ளையடித்திருக்கிறாய் இல்லையா? எனவே, நீ அவனிடம் சொல்ல வேண்டியது. ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார், நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கிய அதே இடத்தில் அவை உனது இரத்தத்தையும் நக்கும்.”அப்போது ஆகாபு எலியாவை நோக்கி, ”என் எதிரியே! என்னைக் கண்டுபிடித்துவிட்டாயா?” என்று கேட்டான். அதற்கு அவர் ”ஆம், நான் கண்டுபிடித்துவிட்டேன். ஆண்டவர் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்யும் அளவுக்கு உன்னையே விற்றுவிட்டாய். இதோ! நான் உனக்குத் தீங்கு வரச் செய்வேன். உனது வழிமரபை ஒழித்துவிடுவேன். உரிமை மக்களாகினும், அடிமைகளாயினும், இஸ்ரயேல் ஆண்மக்களை ஆகாபிடமிருந்து வெட்டிஎறிவேன்.நெபாற்றின் மகன் எரொபவாமின் குடும்பத்திற்குச் செய்ததுபோல, உன்குடும்பத்திற்கும் செய்வேன். ஏனெனில் நீ இஸ்ரயேலைப் பாவத்திற்கு உள்ளாக்கி எனக்குப் பெருஞ்சினம் மூட்டினாய்.மேலும் ஈசபேலைக் குறித்து ஆண்டவர் சொல்லுவது: இஸ்ரயேலின் மதிலருகே நாய்கள் ஈசபேலைத் தின்னும். ஆகாபைச் சார்ந்தவர்கள் நகரினுள் மடிந்தால் நாய்களுக்கு இரையாவர் நகர்ப்புறத்தே இறந்தால், வானத்துப் பறவைகளுக்கு இரையாவர்” என்றார்.ஆண்டவர் பார்வையில் தீயதெனப் பட்டதைச் செய்யுமளவுக்குத் தன்னையே விற்றவிட்ட ஆகாபைப்போல் கெட்டவன் எவனும் இருந்ததில்லை. ஏனெனில் அவனுடைய மனைவி ஈசபேல் அவனைத் தூண்டிவிட்டாள்.மேலும், இஸ்ரயேல் மக்கள் முன்னிலையிலிருந்து ஆண்டவர் விரட்டியடித்த எமோரியர் செய்துகொண்ட சிலைகளை எல்லாம் வழிபடும் அளவுக்கு அவன் மிகவும் இழிவாக நடந்துகொண்டான். அச்சொற்களை ஆகாபு கேட்டவுடன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு வெற்றுடல் மீது சாக்கு உடை உடுத்தி, நோன்பு காத்துச் சாக்குத் துணிமீது படுத்தான் பணிவோடு நடந்துகொண்டான். அப்பொழுது திஸ்பேயரான எலியாவுக்கு ஆண்டவர் உரைத்த வாக்கு: ”என் திருமுன் ஆகாபு தன்னைத் தாழ்த்திக் கொண்டதைத் கண்டாயன்றோ? அவன் என் திருமுன் தன்னைத் தாழ்த்திக்கொண்டதால் நான் அவன் வாழ்நாளின்போது தீமை வரச்செய்யாமல், அவனுடைய மகனது வாழ்நாளின்போது அவனுடைய குடும்பத்தாரின் மேல் தீமை விழச்செய்வேன்.”

**பதில்பாடல் :** கடவுளே உமது பேரன்பிற்கேற்ப எனக்கு இரங்கும்.

## நற்செய்தி : மத்தேயு 5 : 43 - 48

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது: உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக, பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக்கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள் உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச்செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச்செய்கிறார்.உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரிதண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா?நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா?ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்“ என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு பகைவர்களை மன்னிக்க நம்மை அழைக்கின்றார். நாம் மன்னிப்பதால் எமக்குதான் நன்மையும் மகிழ்ச்சியும் உண்டாகிறது என்பதை நாம் உணர்ந்தால் நாம் மன்னிக்க இறை அருளோடு முயல வேண்டும். பகைவர்களை மன்னிப்பதற்கும் நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் என்ன தொடர்பு ..... பகைவர்களை மன்னிக்க மறுக்கும் போது ..1)அவர்களுக்கு நம் தூக்கத்தின் மீது அதிகாரம் கொடுக்கிறோம். அவர்களை நினைக்கின்ற ஒவ்வொருமுறையும் நம் தூக்கம் நம்மை விட்டு போய்விடுகின்றது. 2) அவர்களுக்கு நம் உடல் மீது அதிகாரம் கொடுக்கின்றோம். அவர்களைப் பற்றி எதிர்மறையான நினைவு நமக்குள் வந்தவுடன் நம் உடல் எக்கச்சக்கமான எதிர்மறை உணர்வுகளை பிறப்பித்து தன்னைத்தானே காயப்படுத்துகிறது. 3)அவர்களுக்கு நம் மகிழ்ச்சியின் மீது அதிகாரம் கொடுக்கிறோம். மிகமகிழ்ச்சியான நேரத்தில் கூட அவர்களைப் பார்க்க நேரிட்டால் அல்லது அவர்களைப்பற்றி கேள்விப்பட்டால் உடனே மகிழ்ச்சியை இழந்து விடுகின்றோம்.ஆக நம் மகிழ்ச்சியை நிர்ணயிக்கின்ற உரிமையைக கூட அவர்களுக்கு கொடுத்து விடுகின்றோம். எனவே நாம் சிந்தித்துப்பார்ப்போம். எனவே நாம் மன்னிப்பதன் மூலம் ஒரு சுதந்திர மகிழ்ச்சியான மனிதனாக வாழமுடியும் என்பதை நம்புகின்றோமா? எனவே மன்னிப்பை போன்ற உயர்வான பண்பு நமக்குத்தான் நன்மைத் தருகின்றது. எனவே மன்னிப்போம், மறப்போம்.